**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, பொன்னேரி**

**முன்னிலை திருமதி. S. மஞ்சுளா, எம். எல்,**

**06ம் தேதி ஜுன் மாதம் 2026– ஆம் ஆண்டு சனிக்கிழமை**

**முதல் நிலை விசாரணை வழக்கு எண்.9/2026**

அரசுக்காக,

காவல் ஆய்வாளர்,

திருப்பாலைவனம் காவல் நிலையம்,

காவல் நிலைய குற்ற எண். 182/2024 …………..குற்றமுறையீட்டாளர்

//எதிராக//

எ1. கம்பர் வ/47, த.பெ. சின்னப்பய்யன்

எண். 155, சடையம்மன் கோவில் தெரு,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ2– வெற்றி (எ) வெற்றிச்செல்வன், த.பெ. கிருஷ்ணன்

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ3– முனுசாமி, த.பெ. கரிவரதன்

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ4– மணிவீரன், த.பெ. கரிவரதன்

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ5– புஜ்ஜி (எ) விஜய், த.பெ. ராமகிருஷ்ணன்,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ6– காமேஷ், த.பெ. சடையன்,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ7– ஸ்ரீதர், த.பெ. ராமகிருஷ்ணன்,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ8– டென்னிஸ், த.பெ. முத்துகிருஷ்ணன்,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ9– பிரசாந்த், த.பெ. ராமானுஜம்,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ10– பிரதீப், த.பெ. குப்புசாமி,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ11– மணிகண்டன், த.பெ. ஹரிகிருஷ்ணன்,

மாரியம்மன் கோவில் தெரு, லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ12– ரஜினி, .பெ. மூர்த்தி

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ13– நாராயணன், த.பெ. மாணிக்கம்,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ14– நரேஷ், த.பெ. நாராயணன்,

லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ15– முருகன் (எ) பென்னா முருகன், த.பெ. கிருஷ்ணன,

எண். 6, சடையம்மன் கோவில் தெரு, லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ16– குப்புராஜி, த.பெ.கருப்பசாம,

எண். 8, சடையம்மன் கோவில் தெரு, லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ17–முருகன் (எ) புள்ளு முருகன், த.பெ. சபாபதி

எண்.8, சடையம்மன் கோவில் தெரு, லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ18– சீனிவாசன் த.பெ. ராமச்சந்திரன்,

எண். 3, சடையம்மன் கோவில் தெரு, லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ19– பாபு, த.பெ. முத்து கிருஷ்ணன்,

எண். 6, சடையம்மன் கோவில் தெரு, லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம்

எ20– வேலாயுதம், த.பெ. கணேசன்,

எண். 4, சடையம்மன் கோவில் தெரு, லைட் ஹவுஸ் குப்பம், பழவேற்காடு,

பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். ........எதிரிகள்

இவ்வழக்கு 06.06.2026 இன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு குற்றம்தொடுப்பவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பினர்களைக் கேட்ட பின்னர் ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## //உத்தரவு//

கடந்த 01.09.2024ம் தேதி காலை 9.40 மணிக்கு ராஜ்கமல் என்பவருக்கும் பழவேற்காடு லைட்ஹவுஸ்குப்பத்தை சேர்ந்த கிராமத்தாருக்கும் முன்விரோதம் இருந்து வந்த நலையில் ராஜ்கமல் தன்னுடைய 2 ½ வயதுள்ள எழில்வேந்தன் என்ற தன் மகனை அழைத்துச் செல்வதற்காக தன் தாயார் சாட்சி 2 லோகேஷ்வரி வீட்டுக்கு வந்தபோது சாட்சி 1 ராஜ்கமலுக்கும் எதிரிகளுக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக எதிரி 2 காடசி 1ன் வீட்டில் அத்துமீறி நுழைந்து ஓத்தா தேவிடியா பையா எவ்ளோ திமிரு இருந்தா எங்க மேலயே புகார் கொடுத்துவிட்டு ஊருக்குள்ள வருவ என அசிங்கமாக திட்டி கொண்டிருந்தபோது வீட்டிலிருந்து வெளியே வந்த சாட்சி 1 ராஜ்கமல், சாட்சி 2 விஷ்ணு இருவரையும் எதிரிகள் 3 முதல் 7 வரையானவர்கள் சாட்சிகள் இருவரையும் தரதரவென்று இழுத்து வந்து எதிரிகள் கையில் வைத்திருந்த இரும்பு கம்பி கட்டை போன்ற ஆயுதங்களால் தாக்கியதாகவும், இதனை பார்த்து தடுக்க

வந்த சாட்சி 2 லோகேஷ்வரியை எதிரி 1,8,2,9,10 ஆகியோர் சாட்சி 2ஐ முகம் மார்பு வயிற்றுபகுதியில் கைகளால் அடித்து கீழே தள்ளி காலால் மிதித்துள்ளதாகவும், பின்பு சுதாரித்துக்கொண்ட சாட்சி 1,3,2 தன் தயாரை மீட்டு வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டதாகவும், பின்பு எதிரிகள் 1 முதல் 20 வரை உள்ளவர்கள் கீழே கிடந்த கற்கை எடுத்து சாட்சி 1ன் வீட்டின்மீது எரிந்ததாகவும், மேலும் எ11 ,15,16,17,18,19,20 ஆகியோர் வீட்டின் உள்ளே இருந்த சாட்சிகளை பார்த்து இந்த தேவ்டியா பைன் குடும்பத்தை இங்கே வைத்து கொத்திவிடுவோம் என்று கூறியதாகவும், எதிரி 12,13,4 ஆகியோர் சாட்சி 1 ராஜ்கமலுக்கு சொந்தமான 2.1/2 ட்ச மதிப்பிலான 4 சக்கர வாகனம் (Wagan–R TN 11 8533) என்ற காரையும் மற்றும் ஒரு லட்சம் மதிப்பிலன டிஎன் 18 BP 3208 என்ற ஹோண்டா சைன் இருசக்கர வாகனத்தையும் வீட்டின் முன் இருந்த மற்ற பொருட்களையும் அடித்து உதைத்து உனக்கெல்லாம் கார் எல்லாம் ஒரு கேடா என்று ஆபாச வார்த்தைகளால் திட்டி 4 சக்கர வாகனத்திற்கு சேதத்தை சரிசெய்ய ரூ.54,000/– மும், இருசக்கர வாகனத்திற்கு ரூ. 13,870/– நஷ்டத்ததை ஏற்படுத்தியுள்ளனர். 06.05.2024 அன்று தாட்கோ லோன் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டதால் அன்று கூட்டம் கலைக்கப்பட்டு மறுநாள் 07.05.2024ம் தேதி அதே நபர்கள் கூட்டம் நடத்தி சாட்சி 1 ராஜ்கமலையும் அவரது குடும்பத்தாரையும் தகாத வார்த்தையால் திட்டி ஊரைவிட்டு ஒதுக்கி வைத்த நிலையில் சாட்சி 1 இதுசம்மந்தமாக 09.05.2024 அன்று புகார் அளித்துள்ளார். எனவே எதிரிக் மீது இதச பிரிவுகள் 191(2),191(3),329(4), 296(b),115(2),118(1),351(3),324(4) BNS r/w 4 of TNPHW Actன் கீழ் திருப்பாலைவனம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பா.நி.சு.ச.பிரிவு 230ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீதான குற்றம் முற்றிலும் அமர்வு நீதிமன்றத்தினால் மட்டுமே விசாரிக்கக்கூடிய குற்றமாகையால் இவ்வழக்கு மேல் விசாரணைக்காக பா.நி,சு.ச பிரிவு 232 ன் கீழ் மாண்புமிகு முதன்மை அமர்வு நீதிமன்றம், திருவள்ளூருக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

3. இவ்வழக்கின் எதிரி 1 குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2 பொன்னேரி நீதிமன்ற Crl.M.P.No. 3033/2024, தேதி. 04.09.2024 ன் பேரிலும், எதிரி 2 முதல 14 வரையானவர்கள் மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற Crl.M.P.No. 6008/2024, தேதி. 04.10.2024 ன் பேரிலும், எதிரி 15 முதல் 20 வரையானவர்கள் மாண்புமிகு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற Crl.M.P.No. 1406/2026, தேதி. 17.04.2026 ன் பேரிலும், பிணையில் சென்றுள்ளார்கள். எதிரிகள் பிணையில் இருந்து வர கு.வி. மு.ச. 209(ஆ)வின் கீழ் அனுமதியளிக்கப்படுகிறது.

4. இவ்வழக்கின் சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் பா.நி,சு.ச பிரிவு 232ன் கீழ் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

5. எதிரிகளியிடம் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வழக்காட வசதி உண்டா என வினவியபோது அவர்கள் தங்களுக்கு வசதி உள்ளது எனக் கூறினார்கள்.

6. இவ்வழக்கு மேல் விசாரணைக்காக திருவள்ளூர் முதன்மை மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பப்படுவது குறித்து பா.நி,சு.ச பிரிவு 232ன் கீழ் அரசு குற்றத்துறை வழக்குரைஞருக்கு அறிவிப்பு கொடுக்கப்படவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

7. எதிரிகள் வரும் 31.07.2026அன்று காலை 10.00 மணிக்கு திருவள்ளூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஏற்படும் வாய்தாவிற்கு தவறாமல் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 06.06.2026 ம் தேதி இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**//ஓம். S. மஞ்சுளா//**

நீதித்துறை நடுவர் எண். II,

பொன்னேரி.